# 56கேள்வி அறிவித்தல்
# கட்டடங்கள் திணைக்களம்
# கிழக்கு மாகாணம்

01 நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் **(CIDA) கட்டடங்கள் நிர்மாணத்திற்கு** பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தையுடைய கேள்விதாரரிடமிருந்து **திணைக்கள பெறுகைக்குழுத்தலைவரினால்** அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கு மூடிய கேள்விகள் கோரப்படுகின்றன்.

02 தகுதியுடைய கேள்விதாரர்கள் **கிழக்கு மாகாண பிராந்தியத்தைச்** சேர்ந்தவர்களாக இருப்பதுடன், அவர்களது **பதிவு, முகவரி கிழக்கு மாகாணத்துக்குள்** இருத்தல் வேண்டும்.

03 மீளளிக்கப்படாத கட்டணமாகிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை **பிரதம எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கல்முனையில்** செலுத்தி, பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை **நிறைவேற்று எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கல்முனையில்** சமர்ப்பிக்குமிடத்து 23.03.2017, **பிற்பகல் 03.00** மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

04 பெறுகைமுறையானது **தேசிய போட்டி விலைக்கேள்வி,** ஒருகட்ட ஒருகடிதவுறை முறைமையாகும்.

05 கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஆவணங்கள் இரு பிரதிகளில் மட்டுமே விநியோகிக்கப்படும். தகுதியான கேள்விதாரர்கள் கேள்வி பத்திரங்களை இலவசமாக பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களை **நிறைவேற்று எந்திரி, கட்டடங்கள் திணைக்களம், கல்முனையில்** பெற்றுக்கொள்ளலாம். **(தொலைபேசி இல: 067-2229153)**

06 கீழே தரப்பட்டுள்ள கேள்வித் தொகைகளுக்கான கேள்விப் பிணைகள் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு **தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு, மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், உட்துறைமுகவீதி, திருகோணமலை** என்ற முகவரிக்கு **24.03.2017, பிற்பகல் 02.30** மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக ஒப்படைக்கப்படல் வேண்டும். கேள்விகள், சமூகமளிக்கும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் **மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், உட்துறைமுகவீதி, திருகோணமலையில்** உடனடியாகத் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

07 முன்கேள்விக் கூட்டம் **15.03.2017** மு.ப **10.00** மணிக்கு பிரதம எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கல்முனையில் இடம் பெறும்.

08 பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி முடிவாக அமையும்.

**அட்டவணை**

| வேலைகளின் விபரம் | CIDA தரம் | மதீப்பீட்டுத் தொகை (ரூபா) | ஒப்பந்தக் காலம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | கேள்வி செல்லுபடியாகும் காலம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தொகை (ரூபா) | காலம் |
| தெகியத்தகண்டி நீதி மன்ற வளாகத்தில் தனித்தளம் கொண்ட சட்ட அலுவலகம் நிர்மாணித்தல் | C 7 | 5,512,272.54 | 03 மாதங்கள் | 3,000.00 | 77 நாட்கள் | 55,200.00 | 105 நாட்கள் |
| கல்முனை நீதி மன்ற வளாகத்தில் இரு மாடிகளைக் கொண்ட சட்ட அலுவலகம் நிர்மாணித்தல் | C7 | 7,158,210.40 | 04 மாதங்கள் | 4,000.00 | 77 நாட்கள் | 71,600.00 | 105 நாட்கள் |

மாகாணப்பணிப்பாளர்,
கட்டடங்கள் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்,
உட்துறைமுக வீதி,
திருகோணமலை.
தொலைபேசி இல: 026-2222630
திகதி: 2017.03.01

எந்திரி.க.சந்திரமோகன்
தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு.